**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**DW2 – OS. No. 38/2017 C/W OS No.100/2017 C/W OS No.98/2021**

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி கூடுதல் சார்பு நீதிபதி திருமதி.எம்.மேகலா மைதிலி பி.ஏ.பி.எல் முன்னிலையில் திருமதி.ரேகா கிரேடு 2 பேன்ச் கிலர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.தெய்வசிகாமணி | தொழில் : |
| த/பெ. : திரு, வேலுசாமி | வயது : 58 |
| முகவரி : | |

**1,5 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர். எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். என்னுடைய இருப்பிட முகவரியை காட்டுவதற்காக ஆதார் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். (அசல் சரிப்பார்க்கப்பட்டது) அது பிரதிவாதி தரப்பில் **பி.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் 21.7.2011 தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் பத்திரம் எழுதிக் கொடுத்தவர் என உள்ள கையெழுத்து ராமசாமி கவுண்டர் உடையது. மேற்படி பத்திரத்தில் முதல் சாட்சியாக முத்துகுமார் என்பவர் கையெழுத்து செய்துள்ளார். இரண்டாம் கையெழுத்து ஜெயக்குமார் செய்துள்ளார். பதிவு செய்ததில் முதலாவது கையெழுத்து முத்துகுமாம் இரண்டாம் கையெழுத்து ஜெயக்குமார். ராமசாமி

கவுண்டர் கையெழுத்து செய்ததையும் சாட்சிகள் கையெழுத்து செய்ததையும் நான் நேரில் பார்த்தேன். எனது தரப்பு சாட்சியினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

**மனு அனுமதியின் பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2024.04.23 18:14:18 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.